## "யாழ்.குடாவை துண்டிக்கும் ராணுவத்தின் முயற்சி வெற்றியளிக்கவில்லை"

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 19 இதழ் 143
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 03 - 07 - 1992

[கொழும்பு]
யாழ். குடாவை ஏனைய பெரும் நிலப்பகுதிகளிலிருந்து துண்டிக்கும் முகமாக மேற்கொள்ளப்பட்ட இராணுவத்தின் முயற்சி வெற்றியளிக்கவில்லையென பி. பி. ஸி. தெரிவித்துள்ளது.

கடந்த வருடமும் இதே போன்று ஒரு முயற்சியை இராணுவம் மேற்கொண்டது.
(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் அறிக்கை முன்னுக்குபின் முரணானது

(கொழும்பு)
தற்போது நடைபெற்று வரும் யுத்தம் பற்றி இராணுவம் வெளியிட்டுவரும் அறிக்கைகள் பெரும்பாலும் முன்னுக்குபின் முரணாக இருப்பதாக பி. பி. ஸி. தெரிவித்துள்ளது.
(4ம் பக்கம் பார்க்க]

## எதிர்க்கட்சி உறுப்பினர் கொலை 140 பேர் படுகாயம்

(கொழும்பு)
திக்வெலயில் நேற்று முன்தினம் நடைபெற்ற எதிர்க் கட்சிகளின் 'ஜனகோஷ' போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். மற்றும்
[4-ம் பக்கம் பார்க்க]

### வெற்றிலைக்கேணி கட்டைக்காடு பகுதிகளில்

# நேற்று முழுநாளும் அகோர குண்டு வீச்சு, ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
**வெற்றிலைக்கேணி-கட்டைக்காடு பகுதிகளிலும் அதனை அண்டிய குடியிருப்பு பகுதிகளிலும் நேற்று அகோர குண்டு வீச்சுக்களும், ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன**

இப்பகுதிகளில் நேற்று மோதல்கள் தணிந்திருந்த போதும் நேற்று முழுநாளும் கடுமையான குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றன.

சட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, புல்லாவெளி, வாடியடி ஆகிய பகுதிகளை நோக்கி அவ்ரோ, பொம்மர்கள் அகோரகுண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

இப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா அரசு அறிவித்துள்ளபோதிலும் தொடர்ந்து விமானத்தாக்குதல்கள் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானஇத்தாக்குதல்கள் நேற்று ஐந்தாவது நாளாகவும் நடைபெற்றன.

இம்மோதல்களின் போது படையினர் தரப்பில் பலத்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது (56

## ஒபரேஷன் பலவேகய - II இன்று மாலை பூர்த்தியாகும்

[கொழும்பு]
வடபகுதியில் இடம்பெற்று வரும் ஒபரேசன் பலவேகய-2 இன்று மாலையுடன் முடிவடையுமென கேர்ணல் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் கூறுகையில்

அடுத்த 48 மணிநேரத்துடன் இந்த 'ஒபரேஷன் பலவேகய-2' இராணுவ நடவடிக்கை பூர்த்தியாகிவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.
(சி-கே)

## அரசியல் தீர்வுடன் இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)
இனப்பிரச்னை தீர்வுக்கு இரு முனைக் கொள்கை கடைபபிடிக்கப்படும் என ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்

வடக்கு - கிழக்கில் இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு இராணுவ நடவடிக்கை ஆகிய இரு முனைக் கொள்கையை அரசு கடைப்பிடிக்கும் என அவர் மேலும் விளக்கம் அளித்துள்ளார் [கே]

## இந்திய அமைச்சரவை 62 ஆக உயர்வு

[புதுடில்லி]
இந்திய மத்திய அமைச்சரவையில் ஐந்து இணை அமைச்சர்களும் ஒரு துணை அமைச்சரும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளார்கள்.
[4-ம் பக்கம் பார்க்க]

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
மண்டைதீவில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர்நேற்று முன்தினமிரவும், நேற்றும் அடிக்கடிபண்ணைக்கரையோர பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டவண்ணம் இருந்தார்கள். [வி]

## கொக்கட்டிச்சோலையில் பத்துத் தமிழர் படுகொலை

(மட்டக்களப்பு)
கொக்கட்டிச்சோலையில் இராணுவத்தினரின் சித்திரவதைக்குப்பின் பத்து தமிழர்கள் கொடூரமாக கொல்லப்பட்டுள்ளார்கள்.

கடந்தவாரம் கொக்கட்டிச் சோலை நெல்லிக்காடு, சாமந்திஆறு, களிபடு ஆகிய இடங்களில் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளின்போது இப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

வெள்ளாச்சி மாசிப்போடி. தங்கம்மா மாசிப்பொடி, மாசிப்போடி பத்மநாதன்
[4ம் பக்கம் பார்க்க]
[4-ம் பக்கம் பார்க்க]

## உணவுப் பொருட்கள் இராணுவத்தால் கொள்ளை

(யாழ்ப்பாணம்)
காங்கேசன்துறைக்கு கப்பலில் வந்த உணவுப் பொருள்கள் சிறிலங்கா இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
[4ம் பக்கம் பார்க்க]

## வங்காலை முகாம் விரைவில் மூடப்படும்

(கொழும்பு)
வங்காலைப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் அனைத்தும் இம்மாத இறுதியுடன் அகறறப்படுமென கொழும்பிலுள்ள இராணுவத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

இப்பகுதியில் குடியிருந்த 485 குடும்பங்களும் தற்போது 'சனிவிலேச்' என்ற அகதி முகாமில் தங்கியிருப்பதினால் வங்காலைப் பகுதி ஒரு மனித நடமாற்றம் அற்ற பிரதேச
(4-ம் பக்கம் பார்க்க)

### ★ பல்கலைக்கழக தெரிவு

## தமிழ் மாணவர் அனுமதி வழமைபோல் அமையும்?

(யாழ்ப்பாணம்)
கடைசியாக பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் தொகையளவு மாணவர்களை 1990-ம் ஆண்டு க. பொ. த. (உயர் தர) ஆகஸ்ட் பரீட்சையிலும் 1991 ஆண்டு ஏப்ரல் விசேட பரீட்சையிலுமிருந்து தேர்ந்தெடுப்பதற்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துவருவதாக தெரியவருகிறது.

இதன்பிரகாரம் வடக்கிலுள்ள மாவட்டங்களில் 1989-ம் ஆண்டு ஆகஸ்ட் பரீட்சையில் பல்கலைக்கழகத்
[4-ம் பக்கம் பார்க்க]

## பல்லேகல தடுப்பு முகாமில் பயங்கர கோஷ்டி மோதல்

(கண்டி)
கண்டி பல்லேகல தடுப்பு முகாமில் ஏற்பட்ட பயங்கர கோஷ்டி சண்டையில் ஒருவர் பலியானார். மேலும் மூவர் படுகாயமடைந்தனர்,

இந்த தடுப்பு முகாமில் 458 தடுப்பு கைதிகள் இருக்கிறார்கள் என்றும் அநேகமானோர் ஜே. வி. பி. சந்தேக நபர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

பல நாட்களாக இந்த கைதிகளுக்கிடையே கோஷ்டி வாய்ச்சண்டை ஏற்பட்டுவந்ததாகவும் இதுவே மிக பயங்கர மோதலாக நேற்று முன்தினம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்தவாரம் இதேபோன்ற மோதல் பூஸா முகாமில் இடம்பெற்றதும் தெரிந்ததே.

## கே. ஜி. பியிடமிருந்து ராஜீவும் நிதி பெற்றார்

[மொஸ்கோ]
முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியும் ரஷ்ய உளவுப் படையின் கே. ஜி. பி. யிடம் பணம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள், ராஜீவ் காந்தி ஆகியோர் தங்கள் கட்சிகளுக்காக கே. ஜி. பி.யிடம் பணம் பெற்றுள்ளதாக ரஷ்யாவில் இருந்து வெளியாகும் 'இஸ்
[4-ம் பக்கம்பார்க்க]

# வரி விளம்பரம்

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாத ரோகங்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலை, கால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி6436)

### மீரா பிரசுரங்கள்

காலத்தைப் பிரதிபலிக்கும் கதைகள், சமுதாயப் பிடிப்புள்ள கதைகள் மீரா பிரசுரங்களாக இப்பொழுது வெளிவருகிறது. ஐந்து புத்தகங்களை வாங்கினால் ஐம்பது ரூபா பெறுமதியான மீரா பிரசுரம் அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. (சி-6491)

### காணாமல் போய்விட்டது

பசுக்கன்று நிறம் கறுப்பு அடிவயிறு வெள்ளை காணாமல் போய்விட்டது. அதைக்கண்டவர்கள் இ. லிங்கநாதன் பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு என்ற விலாசத்தில் அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-6849)

### நீமியா உரம்

நெற்பயிர், மற்றும் தோட்டப் பயிர்கள் அதிக விளைச்சலை தர, பூச்சி புழுக்களின் தாக்குதலிருந்து பாதுகாக்கப்பட நீமியா உரம், நம்பகமானது. சிக்கனமானது. வேம்பினை ஆதாரமாகக் கொண்டதொரு உள்ளூர் உற்பத்தி நீமியா உரம். கிலோ ரூபா 15/- தொகையாக வாங்குபவர்களுக்கு கவர்ச்சிகரமான கழிவு அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கும். மில்க்வைற். (எ-2268)

### English Tution

Individual and House visits by Retired Government Servant. Contact: 204, Manipay Road, Otumadam, Jaffna. on Sundays between 8.00 a m 10-00 a. m. (C 6492)

---

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள்

வருடாந்த

# மகோற்சவ விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான ஆங்கீர வருடம் ஆனி மாதம் 20-ம் நாள் (04-07-1992) சனிக்கிழமை 11-30 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்று தொடர்ந்து 11 நாட்கள் மகோற்சவம் நடைபெறும்.

**10.7.92 வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழா**

**12.7.92 ஞாயிற்றுக்கிழமை மாலை சப்பறத்திருவிழா**

**13.7.92 திங்கட்கிழமை காலை தேர்த்திருவிழா**

**14.7.92 செவ்வாய்க்கிழமை காலை தீர்த்தோற்சவம்** நடைபெறும்.

4-7-1992ம் திகதி சனிக்கிழமை கொடியேற்ற தினத்தில் விசேட மேளக்கச்சேரியும், இரவு சிறப்பு நிகழ்ச்சியாக அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ அவர்களின் சொற்பொழிவும்

யாழ். ஸ்ரீகுகனுடன் ரங்கன் இணைந்து வழங்கும் ''ஷப்தஸ்வராவின்'' இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும் அடியார்கள் அனைவரும் வந்து அருளைப் பெறுமாறு வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

**தேவஸ்தான பாதுகாவலர்**

(சி 6483)

---

### வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

கட்டைக்காட்டுப் பகுதியில் கடந்த மாதம் 30-ம் திகதி இராணுவத்துடன் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கைகளின் விபரம்:

மேஜர் குமரன் [துரைச்சாமி துரைசிங்கம் - மட்டக்களப்பு], மேஜர் விடுதலை அல்லது லம்போ [ராசரட்ணம் ஆனந்தராசா - கொக்குவில் மேற்கு], லெப். கலையரசன் அல்லது விஜயதீபன் (கந்தப்பு சௌந்தராசன் - மன்னம்பிட்டி], 2-ம் லெப். மணிமாறன் அல்லது சர்மா (இராமணநந்தாசர்மா - கோண்டாவில் மேற்கு), தமிழரசன் [குலசிங்கம் குணாளன் - பருத்தித்துறை], பிறணயன் அல்லது பிலிப் [அருளம்பலம் டிக்கோ 1-ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம்).

நேற்று முன்தினம் கட்டைக்காடு - புல்லாவெளிப் பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவியோர் விபரம்:

சேனன் [தங்கராசா தங்கப்பதக்கம் - கண்டாவளை), கலைவாணன் [அருணாசலம் லவக்குமார் - அம்பாறை), அன்புமாறன் [அன்ரன் அருள்நேசன் ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்].

இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

## இராசி பலன்

03-07-1992

வெள்ளிக்கிழமை

(தமிழுக்கு ஆனி 19)

திருதியை மு. ப. 11-38 வரை, ஆயிலியம் மு. இ. 10-16 வரை, மரணயோகம் இராகுகாலம் காலை 10-27 முதல் 11-67 வரை, சுபநேரம் காலை 5-57 முதல் 7-27வரை சதுர்த்திவிரதம்.

மேடம்: வேலைப்பழு, கண்டிப்பு, தொழில் மந்தம்.

இடபம்: வெளியார் தலையீடு, மூலதன அதிகரிப்பு, காரிய சித்தி.

மிதுனம்: குடும்ப வேற்றுமை, பணமுடை, மனவேதனை.

கடகம்: வாக்குவன்மை, சுபகாரியம், மாமனார் உதவி.

சிங்கம்: தப்பபிப்பிராயம், தொழில் குறைவு, மனச்சஞ்சலம்.

கன்னி: பெரியோர் ஆசி, கண்டிப்பு, அதிக வருவாய்.

துலாம்: அன்னியர் உறவு, குடும்பசுகம், வெளியூர் செய்தி

விருச்சிகம்: தொழில் விரக்தி, அகால போஜனம், வெறுப்பு.

தனுசு: குடும்ப கஷ்டம், வைத்தியச்செலவு, அலைச்சல்.

மகரம்; சகோதர உதவி, கற்பனை மிகுதி, மனக்களிப்பு.

கும்பம்: காரியம் கைகூடல், தொழில் வெற்றி, அறிஞர் சந்திப்பு.

மீனம்: கடன்பகை, அதிகார பங்கம், உடல்உபாதை.

**ஜோஸ்யர்**

---

## 31வது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

03 . 07 . 1992



### அமரர் சி. சரவணப்பெருமாள்

**மலர்வு: 09.10.1921 உதிர்வு: 03.06.1992**

மனிதப்பிறவி எடுத்து எங்களுக்காக வாழ்ந்து எமக்குஇனிய வாழ்வைத் தந்து உங்கள் கடன் முடிந்து தெய்வமாகிய உங்களைத் தினமும் பூசிக்கின்றோம்.

**மனைவி, மக்கள். பேரப்பிள்ளைகள், மருமக்கள்.**

ச. ராஜமணி
சம்பிளியவத்தை ஊறணி.
வல்வெட்டித்துறை. (சி 6480)

---

# ஒரு வருட நினைவு நாள்

கரவெட்டியில்:
22-12-1959



★ ★ ★

கொட்டகலயில்:
03-07-1991

## வரதன்
## (நடராஜா வரதராஜா)

வரதா!


உன்னை இந்த தேசமிழந்து ஒருவருடங்களாகி விட்டதா?
நீ ஏற்படுத்திய அதிர்வுகள் இன்னும் முழுமையாக அடங்க வில்லையே!
பொறுத்திரு மகனே,
மிக விரைவில் உன் கல்லறையின் முன் -
இந்தத் தேசம் விடுதலை கீதமிசைக்கும்.

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

[எ 2270]

---

## ஓராம் ஆண்டு
# நினைவஞ்சலிகள்



## வீரவேங்கை
## வெற்றிவேல் வசந்தன்
## (கோபு)

வீரஜனனம்: **29-12-1974** வீரமரணம்: **16-07-1991**

**திதி: 04-07-1992**

வசந்தன் என்று நாங்கள் உன்னை
அழைத்தோம் அன்று. இன்று வசந்தனைக்காணவில்லை
உன் தோழர்கள் கோபு என்று அழைத்தார்கள்.
இன்று நீ கோபுரமாகிவிட்டாய்.

குடும்பத்தினர்.

சிவன்கோவில் றோட்,
வசந்தன் வீதி,
பருத்தித்துறை. (சி-6493)

# தமிழக மக்களின் மனக்குமுறலைத் திசைதிருப்ப மதுரையில் நடைபெற்ற அ. தி. மு. க. மாநாடு

(மதுரை)

மதுரையில் இருநாட்களாக அனைந்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் நடாத்திய முதலாவது ஆட்சி ஆண்டு நிறைவு வெற்றிவிழா முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் புகழ்ச்சிக்காக நடாத்தப்பட்ட ஒருவிழா என்றே தற்போது கருத்துக் கூறப்படுகின்றது

தமிழ்நாட்டு மக்களை நம்பி வந்த இலங்கைத் தமிழ் அகதிகளை வலுக்கட்டாயமாகத் திருப்பி அனுப்பியதினுலும், விடுதலைப்புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடைசெய்டச் செய்ததினுலும் தமிழ்நாட்டு மக்களிடையேஏற்பட்டு வந்த மனக்குமுறல்களை திசை திருப்பும் நோக்கத்துக்காகவே குறிப்பாக இந்த விழாவை ஜெயலலிதா நடாத்தியதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றூர்கள்.

தமிழ்நாட்டு மக்கள் தமது கட்சிக்கே தொடர்ந்தும் ஆதரவு வழங்கிவருகின்றூர்கள் என்பதை உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்தும் முகமாகவே அவரின் கட்சித் தொண்டர்கள் இந்தவிழாவின் நிகழ்ச்சி நிரல்களை மிக சாமார்த்தியமாகவும் தந்திரமாகவும் தயாரித்துள்ளார்கள்.

விழாவை நடாத்துவதற்கு முன்பாகவே பாமரமக்களிடம் வலுக்கட்டாயமாக ஒரு ரிக்கற் பத்து ரூபா வீதம் 50 லட்சம் ரிக்கற்றுகளை விற்பனை செய்துள்ளார்கள்.

இப்பணத்தைக் கொண்டே இவர்கள் தமது விழாவை பெருமெடுப்பில் நடாததியுள்ளார்கள். இவ்விழாவில் லட்சக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டவர் என்று வானெலிச் செய்திகள் தெரிவித்த போதிலும் விழாவில் கலந்து கொண்டவர்களில் முக்கால் பங்கினர் மிகவும் வறிய மக்கள் என்றே கூறப்படுகின்றது.

இருநாள்விழாவிலும் மூன்று நேர உணவுப்பொட்டலங்கள் வழங்கப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

4 ஆயிரம் தெரிந்தெடுக்கப்பட்ட சமையல்காரர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 75 லட்சத்துக்கு மேற்பட்ட உணவுப் பொட்டலங்களை மக்கள் பெறுவதிலேயே முக்கிய கவனம் செலுத்தினுர்களேஒழிய விழா நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதில் அக்கறை காட்டவில்லை.

விழா இருநாள் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்ளவந்த மக்கள் வெள்ள நெரிசலில் அகப்பட்டு ஆறுபொதுமக்கள் பலியாஞர்கள் என்று உண்மைக்கு மாருகக் கூறப்பட்டுள்ளது. ஆனுல் உண்மையில் உணவுப் பொட்டலங்களைப் பெறுவதில் வறிய மக்கள் முண்டியடித்துக்கொண்டு சென்றதில் நெரியுண்டு இறந்துள்ளார்கள்,

இவர்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கும வைபவத்தை ஆரம்பித்து வைப்பதற்காக வந்த உணவு அமைச்சர் திரு விஸ்வநாதனை மக்கள் முட்டிமோதி விழுந்திவிட்டார்கள். இந்த நெரிசலிலிருந்து அமைச்சரை உயிரோடு காப்பாற்றுவதற்காக பொலிஸார் மக்கள் கூட்டத்தின் மீது மேற்கொண்ட பலத்த தடியடிப் பிரயோகத்தின்பின்பே அமைச்சரை பலத்த காயங்களுடன் பொலிஸார் மீட்டபோதும் அவரின் இடதுகால் முறிந்து விட்டது.

இதேபோல்தான் அண்மையில் கும்பகோணத்தில் நடைபெற்ற மாசிமகம் விழாவைப் பார்ப்பதற்காக திடீரென வருகைதந்த முதலமைச்சர் ஜெயலலிதா மீது மக்கள் மோதாமல் இருப்பதற்காக பொலிஸார் முன்னெச்சரிக்கைக்காக மக்கள் மீது மேற்கொண்ட தடியடிப்பிரயோகத்தில் மக்கள் சிதறி ஓடியதால் அந்தநெரிசலில் 16 பேர் அதே இடத்தில் பலியாஞர்கள்.

விழா நிகழ்ச்சிகளில்ஒன்ருக மதுரை மீஞட்சியம்பாள் ஆலய தரிசனத்துக்கு முதலமைச்சர் வரும்போது சட்சாத் மீஞட்சி அம்பாள் போல் உடையணிந்து வெள்ளிப்பல்லாக்கில் தொண்டர்களால் சுமந்து வரப்பட்டார்.

இவையனைத்தும், அவர் தன்னை விளம்பரப்படுத்த மேற்கொண்ட முயற்சிகளே ஒழிய கட்சியின்பால் கொண்ட அன்பினுல்ல என்று முன்னுள் அமைச்சர் திரு. வீரப்பன் மேற்படி விழாவைப்பற்றி கருத்துத் தெரிவிக்கையில் கூறினுர். (வி)

---

சாவகச்சேரியில்

## பதுக்கல் மண்ணெண்ணை காவல்துறையால் மீட்பு

[சாவகச்சேரி]

சாவகச்சேரிப் பகுதியில் மண்ணெணையைப் பதுக்கி வைத்திருந்த பலர், சாவகச்சேரிக் காவல்துறையினரிடம் வகையாகச் சிக்கிக் கொண்டனர். காவல்துறையினரின் தீவிரத் தேடுதலின்போது, டச்சு வீதியில் 15 பரல் மண்ணெண்ணையும், மீசாலை வடக்கில் 7 பரல் மண்ணெண்ணையும், மீசாலையில் மற்றுமொரு பகுதியில் 4பரல் மண்ணெண்ணையும், சாவகச்சேரி நகர்ப் பகுதியில் 12 பரல் மண்ணெண்ணையும் பிடிபட்டுள்ளன.

இம்மண்ணெண்ணை காவல் துறையினரால் கெருடாவில் அகதி முகாம், நாவற்குழி ஐயஞர் அகதி முகாம், நாவற்குழி வீடமைப்புத் திட்டம், கைதடிச் சந்தி, கச்சாய் ரோட், சாவகச்சேரி நகர்ப் பகுதிகளில் வைத்து அப்பகுதி மக்களுக்கு தலா 2 லீற்றர் வீதம் வழங்கப்பட்டது.

இதேவேளை சாவகச்சேரி நகரில் ஒரு லீற்றர் மண்ணெண்ணையை 35 ரூபாவாக விற்பனை செய்த வியாபாரி ஒருவரும் காவல்துறையிடம் சிக்கினுர். (155)

---

## பாரதியின் கனவு இன்று நனவாகிறது

(கொழும்பு)

'தேமதுர தமிழ் ஓசை உலகமெல்லாம் பரவும் வகை செய்திடவேண்டும்' என பாரதியார் கண்ட கனவு இன்று உண்மையாகி வருகிறது தமிழ் மொழி பேசப்படாத நாடே இல்லை என்னும் அளவுக்கு தமிழ் மக்கள் உலகெங்கும் பரந்து வாழ்கிறுர்கள்,

கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி கொட்டாஞ்சேனை மகளிர் வித்தியாலய மாணவ மாணவிகள் அண்மையில் நடாத்திய தமிழ் மொழித் தினவிழாவில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (க)

---

## உளவு வேலைகளில் ஈடுபட்டோர் விபரங்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

(யாழ்ப்பாணம்)

உளவு வேலையில் ஈடுபட்ட 9 பேருக்குவிடுதலைபுலிகள் மரண தண்டனைவழங்கியது தொடர்பாக வெளியிடப்பட்ட பெயர் விபரம் கீழே தரப்படுகிறது.

முழுப்பெயர்: பேதுரு சாந்தான், வயது 48, முகவரி: அடம்பன், மன்ஞர். தொழில்: விவசாயம், வியாபாரம்.

வவுனியா, மன்ஞர் பகுதிகளில் அமைந்திருந்த சின்னப்பண்டிவிரிச்சான் குளம், பம்பைமடு, செட்டிகுளம், வவுனிக்குளம் ஆகிய இடங்களில் இருந்த முகாம்கள் உள்ளிட 10க்கும் மேற்பட்ட இயக்க முகாம்கள் பற்றிய தகவல்கள் இவர் கொடுத்துள்ளார். இராணுவ உளவுப்பிரிவின் உயர் அதிகாரியான செனிவிரட்ஞ என்பவரை சந்திப்பதற்காக அம்பிகைபாலன், அமரசிங்கா போன்ரேர் மூலம் இவர் வவுனியா ஜோசப் இராணுவ முகாமில் இருந்து உலங்குவாஞர்தி மூலம் கொழும்புக் கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். இவர் தரைமார்க்கமாக வந்து எமது முகாம்கள், கவலரண்கள் ஆகியவற்றை அடையாளம் கண்டு அவதானித்த பின்னர் வவுனியா ஜோசப் இராணுவ முகாம் சென்று அங்கிருந்து தாக்குதலில் ஈடுபடும் இராணுவ உயர் அதிகாரிகளுடன் சேர்ந்து உலங்குவாஞர்தியில் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு வந்து அம்முகாம்களையும், காவலரண்களையும் அடையாளமும் காட்டியுள்ளார். மது அருந்தும் பழக்கமுடைய இவர் இராணுவத்துடன் சேர்ந்து மதுஅருந்துவதற்காகவே மேற்படி காட்டிக்கொடுப்பு செய்ததுடன் 1000வரையான பணத்தையே நேரடியாகப்பெற்றுள்ளார். மேலதிக பணமும், பொருள்ளுகம் வழங்குவதாக இராணுவத்தினரால் வாக்குறுதி அளிக்கப்பட்டபோதிலும் அவை வழங்கப்படவில்லை.

முழுப்பெயர்: பல்ராஜசிங்கம் மகேஸ்வரன் (மோகன்), வயது: 27, முகவரி: தேஞடையான், அடம்பன் மன்ஞர். தொழில்: விவசாயம், வியாபாரம்.

பூநகரி பகுதிக்கு இராணுவம் வர முன்னர் அப்பிரதேசம் பற்றியும் அப்பகுதியில் அமைந்திருந்த இயக்க முகாம்கள் பற்றியும் விரிவான தகவல்களை இராணுவத்திற்கு வழங்கியுள்ளார்.

வவுனியா மன்ஞர் பகுதிகளில் அமைந்திருந்த வட்டக்கண்டல். காத்தான்குளம், விடத்தல்தீவு ஆகிய இடங்களில் இருந்த முகாம்கள் உள்ளிட்ட பலஇயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை இராணுவத்திற்கு வழங்கியதோடு அதில் விடத்தல்தீவில் இருந்த முகாம் உட்பட சில முகாம்கள் விமானத் தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் காரணமாக இருந்துள்ளார். பல தமிழ்ப் பொதுமக்களுடன் தந்திரமான முறையில் பழகி பல பொய்க் காரணங்களைக் கூறி அவர்களைத் தமது தகவல் சேகரிப்புக்கு பயன்படுத்தியுள்ளார். இக்காட்டிகொடுப்புகளுக்காக இராணுவத்திடமிருந்து கட்டம் கட்டமாக மொத்தம் 53,000 ரூபா பணத்தையும், தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டுவரலாம் எனவும் பூரண அனுமதியைப் பெற்றிருந்ததன்மூலம் 8-000 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானத்தையும் பெற்றுள்ளார் (வி)

---

## வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

சிராவஸ்தி ஊழியர்களைத் தாக்கியது தொடர்பாக, திருகோணமலை சுதந்திரக்கட்சி எம். பி. மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளது.

இது குறித்து நீதி விசாரணை நடத்துவதற்காகக் கறுவாக்காட்டுப் பொலிஸார் சபாநாயகரிடம் அனுமதி கோரவுள்ளனர்.

திரு. எம். கே. ஏ. டி. எஸ். குணவர்த்தஞ தனிப்பட்ட பிரச்சினை காரணமாகச் சிராவஸ்தி ஊழியர் சிலரைத் தாக்கியதாகப் பொலிஸில முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (சி)

---

தமிழர் - சிங்களவர்

## உறவுக்கு இந்தியா முயலவேண்டும்

(சென்னை)

இலங்கையில் தமிழர் சிங்களவர்களுக்கிடையிலான நல்உறவை மேம்படுத்த இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டுமென மதுரையில் கூடிய அ தி மு. க. மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்திய பிரதமர் நரசிம்மராவ், இலங்கை அதிபருடன் தொடர்பு கொண்டு இலங்கையில் தமிழர் சிங்களவர்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்தவும் முயற்சிகள் எடுக்க வேண்டுமெனவும் அத்தீர்மானத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (கே]

---

## விசேட அட்டைகள்

[மன்ஞர்]

மன்ஞரிலுள்ள அரச ஊழியர்களுக்கும். மீனவர்களுக்கும் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன இவ்வடையாள அட்டையில் மன்ஞர் அரசாங்க அதிபர், இராணுவஅதிகாரி ஆகியோர் கையொப்பமிட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. [59]

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மாணவ மன்றத்தின் 'விருட்சம்' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று 3-ம் திகதி வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

ஃ ஃ ஃ


பரீட்சை சபை

(வட்டுக்கோட்டை)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட பரீட்சை சபையினர் இன்று 3ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணி ளவில் கூடி கோட்ட மட்டத்திலான பொதுப்பரீட்சை பற்றி ஆராயவுள்ளது. (139)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் திருமதி புலோறன் அருந்தவமலர் அரியநாயகம்

தோற்றம்: 14-06-1936

மறைவு: 03-07-1991

ஆண்டொன்று சென்றதுதான்
அம்மா நீ எம்முடனே
ஆண்டாண்டு தோறும்
எம் உள்ளத்தில் வசிக்கின்றுய்
அம்மா நீ இப்போ
காக்கும் தெய்வமாய்
வாழ வைக்கும் தெய்வமாய்
ஆண்டவன் அடி சேர்ந்து
அவன் ஒளியில் அருள் பெற்று
மாதாவின் மலரடியில்
வாடாத மலராக நீ நிற்க
ஆண்டவரை
வாழ்த்துகிறேம், வேண்டுகிறேம்.

இங்ஙனம்

அன்புக் கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,
உற்றுர், உறவினர்கள்.

''அன்ன வாசா''
சூராவத்தை,
சுன்ஞகம்.

[சி-6494]

# ★ 10ம் நூற்றுண்டின் புராதன அம்மன் விக்கிரகம் பூநகரி பகுதியிலிருந்து மீட்பு

(யாழ்ப்பாணம்)

பூநகரி பல்லவராயன்கட்டுப் பகுதியில் சாசனத்துடன் கூடிய புராதன புவனேஸ்வரி அம்மன் விக்கிரகத்தை யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையினர் கண்டுபிடித்துள்ளனர் இச்சிற்பம் காணப்பட்ட இடத்தில் புராதன மட்பாண்ட ஓடுகளும், செங்கட்டிகளும் காணப்பட்டதுடன் இதற்கு அருகில் ஏற்கனவே ஒரு விஷ்ணு சிலையும், சோழ நாணயமும் வேறுபல நாணயங்களும் கட்டிட அழிபாடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

6 அங்குல உயரமும் ஒரு றாத்தல் நிறையும் கொண்ட இவ்விக்கிரகம் செம்பினுல் செய்யப்பட்ட முழுவிக்கிரகமாகும். இதன் ஒரு கரம் அபயகஸ்தத்தையும், மறுகரம் வரதகஸ்தத்தையும் குறித்து நிற்கிறது. இதன் தலையிலுள்ள முடி மேல் போன்ற வடிவத்தில் அமைந்துள்ளது. இரு கால்களுக்கும் இடையிலமைந்திருந்த வாகனத்தின் முன்பக்கம் உடைந்துள்ளது. ஆயினும் பின்பக்கத்திலிருக்கும் வாலைக் கொண்டு இது ஒரு சிங்கவாகனம் என ஊகிக்க இடமுண்டு. இதன் பீடத்திலுள்ள சாசனம் இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

அது தேவநாகரி எழுத்தில் 'ஸ்ரீபுவனேஸ்வரி' என எழுதப்பட்டுள்ளது. இவ்வரிவடிவம் முற்பட்ட சோழர் காலத்திற்குரிய தென்பதை (10 ம் 11ம் நூற்றுண்டு) உறுதிப்படுத்துகிறது. இச்சிற்பத்தில் தென்னிந்திய நாகபட்டின கலைமரபின் சாயல் காணப்பட்டாலும் இலங்கைக்கேகுரிய சில தனித்துவமான அம்சங்களும் காணப்படுகிறது.

வடமாகாணத்தில் சாசனத்துடன் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது புராதன இந்து விக்கிரகம் என்ற வகையில் இது இலங்கைத் தமிழர் தொடர்பாகக் கிடைத்த புராதன சான்றுகளில் பல வகையிலும் முக்கியத்துவம் பெறுகிறது. ஏற்கனவே சோழர் தொடர்பாக பூநகரியில் கிடைத்த சான்றுகளை வைத்து நாம் கூறிய கருத்துகளை இவ்விக்கிரகம் மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது. தற்போது இவ்விக்கிரகம் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் வைக்கப்பட்டுள்ளது. [மா]

## ஊரியான் பாதையில் பயணிகளிடம் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

விமானக்குண்டு வீச்சுக்குர், பலத்த ஷெல் தாக்குதல்களுக்கும் மத்தியில் பிரயாணம் செய்த பயணிகளிடம் ஊரியான் பகுதியில் இரவு நேரத்தில் பணமும், பொருள்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கொழும்பு, மன்னர் பகுதிகளிலிருந்து மேற்படி பாதையினூடாக இரவு நேரத்தில் மக்கள் பயணம் செய்யும்போது இப்பகுதிகளைச் சுற்றி விமானக் குண்டுத் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வேளைகளில் பயணிகள் தமது பொருட்களை கைவிட்டு பாதுகாப்பான இடங்களிலிருந்து பின்பு மீண்டும் வந்து பார்க்கும்போது, அவர்களின் பொருட்களும், பயணப்பைகளில் இருந்த பணங்களும் களவாடப்பட்டிருப்பது கண்டு பெருஅதிர்ச்சி அடைந்துள்ளார்கள்,

இவ்வாறு தமது பொருட்களையும், 16 ஆயிரம் ரூபாவையும் பறிகொடுத்தமன்னர்மாவட்ட பிரதி க ணிஆணையாளர் திரு. ஏ. ஏ. எட்வேட் தமக்கு நேர்ந்த கதியை, தமிழீழ காவல் துறைக்கு முறையிட்டுள்ளார். (வி)

இடம்பெயர்ந்த

## மாணவருக்கு அனுமதி மறுப்பு?

(நாவற்குழி)

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணப் பகுதியில் தங்கிய பின்னர் நாவற்குழி கிழக்குப் பகுதியில் குடியேறிய குடும்பங்களைச்சேர்ந்த பிள்ளைகளுக்கு நாவற்குழி மகாவித்தியாலயத்தில் அனுமதி வழங்க மறுக்கப்படுகிறது.

இவர்களை அடுத்த ஜனவரி மாதம் அனுமதி பெற வருமாறு கூறப்படுகிறதாம். (107]

## தேசிய தொழிற் பரீட்சைகள் மீண்டும் நடைபெறவுள்ளது

[யாழ்ப்பாணம்)

கடந்த இரு ஆண்டுகளாக நடைபெறுதிருந்த தேசிய தொழிற் பரீட்சைகள் மீண்டும் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடாத்தப்படவுள்ளதாக அதிபர் திரு. ஜெயரட்ணம் தெரிவித்துள்ளார். மேற்படி பரீட்சைகள் நாளை 4ம் திகதி முதல் தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெறும்.

ஏற்கனவே அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளன. இதுவரை இவற்றைப் பெறுதவர்கள் இன்று 3ம் திகதி தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையைச் சேர்ந்த தேசிய தொழிற் பரீட்சை அதிகாரி ம. சிவயோகசுந்தரத்தை காலை 9 மணிக்கு தொழில் நுட்பக் கல்லூரியில் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றுர்கள்.

## இளைஞர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

ஊரியான் பகுதியூடாக வந்துகொண்டிருந்தவர்களை நோக்கி படை முகாம்களில் இருந்து படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தினுல் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பண்டத்தரிப்பு அம்மன் கோயிலடியைச் சேர்ந்த எம். அல்பிரட் [27-வயது] என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

## துர்க்கை ஆலயம் மீது தவறுதலாக குண்டுவீச்சாம்

(கொழும்பு)

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் தவறுதலாக குண்டுவீச்சு இடம்பெற்றதாக கேர்ணல் சரத்முனசிங்க தெரிவித்துள்ளார்.

துர்க்கை அம்மன் கோவில் மீது வேண்டுமென்று குண்டு வீசப்படவில்லை அக்கோவிலை சுற்றி தீவிரவாதிகள் தாக்கியதாலேயே தவறுதலாக கோவிலின் மீது விமானக்குண்டுவீச்சு இடம்பெற்றது.

உலகில் எந்த ஒரு போராட்டத்திலும் ஆலயங்கள் மீது குண்டுகள் போடப்படுவதில்லை எமது நோக்கமும் அதுவல்ல ஆனல் இது ஒரு தற்செயலான சம்பவம் என்றுர். [கே]

## 40,000பால்மாபைக்கட்டுகள் அழிக்கப்பட்டன

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து பழுதடைந்த நிலையில் அனுப்பப்பட்ட 40,000பால்மா பக்கெட்டுகள் அழிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட இந்தப் பால்மா பாவனைக்குவாத நிலையில் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டது.

## மனிதஉரிமைகள் பணியகம் மட்டுநகரில் திறக்கப்படுகிறது

(மட்டக்களப்பு)

மனித உரிமை பணியக காரியாலயம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை கோவிந்தன் வீதி மட்டக்களப்பில் திறக்கப்படவுள்ளது

காணமற்போனேர் பற்றிய முறைப்பாடுகளை பதிவு செய்வதுடன் தடுப்புமுகாம்களில் உள்ளவர்களின் மனித உரிமைகள் தொடர்பாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்தக் காரியாலயம் பயன்படும்.

இதேவேளை, தென்பகுதித் தடுப்புமுகாம்களிலுள்ளவர்களின் விபரங்களும் மட்டு. சிறைச்சாலை, பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் தடும்புக் காவலிலுள்ளவர்களின் விபரங்களும் மட்டக்களப்பு சமாதானக்குழு காரியாலயத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

## மறியல் போராட்டம்

(சாவகச்சேரி]

ஆசிரிய இடமாற்றத்தைக் கண்டித்து மட்டுவில் மகாவித்தியாலய மாணவர்கள்நேற்று மறியல் போராட்டம் நடத்திஞர்கள்.

இம்மறியல் போராட்டத்திஞல் நேற்று இப்பாடசாலை இயங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (155)

### பொது அறிவு இறுதிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் ரோட்டறிக் கழகத்தின் ஆதரவில் யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே நடாத்தப்பட்ட பொதுஅறிவுப் போட்டி இறுதி நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை உடுவில் மகளிர் கல்லூரியில் பிற்பகல் 1 மணிக்கு நடைபெறவுள்ளது,

திருமதி ஜே. எம். சிவப்பிரகாசம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் இவ்விறுதிப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், உடுவில் மகளிர் கல்லூரியும் கலந்து கொள்கின்றன. (வி]

### வங்காலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகவே காட்சியளிக்கின்றது.

இப்பகுதியிலிருந்து இராணுவம் வெளியேறியவுடன் இப்பகுதியில் பிரதான பொலிஸ் நிலையம் ஒன்று திறக்கப்படுமென் றும் கூறப்படுகின்றது.

இராணுவம் வெளியேறுவதாக அறிவித்ததைத் தொடர்ந்து 'சனிவிலேச்' அகதிமுகாமில் தங்கியுள்ள 485 குடும்பங்களில் 325 குடும்பங்கள் உடனடியாக தமது சொந்த இடங்களில் குடியேற சம்மதம் தெரிவித்துள்ளார்கள். இக்குடும்பங்கள் ஆவணி மாதம் முற்பகுதியில் அங்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (வி)

### பல்கலைக்கழக தெரிவு

(1ம்-பக்கத் தொடர்ச்சி;

துக்கு தோற்றிய தமிழ் மாணவர்கள் தொகை இந்தப் பரீட்சைகளிலும் எடுக்கப்படுமெனத் தெரியவருகிறது.

எனினும் 1990-ம் ஆண்டு க. பொ. த. (உயர்தர) ஆகஸ்ட் பரீட்சையும் 1991-ம் ஆண்டுக்கான க. பொ. த. உயர்தரம் (விசேட) பரீட்சையும் வெவ்வேருக கணக்கப்படுமெனவும் விசயமறிந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. (சு)

### கே. ஜி. பியிடமிருந்து

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வெஸ்தியா' பத்திரிகை கட்டுரை வெளியிட்டுள்ளது.

ராஜீவ்காந்தி பெற்ற பண உதவிக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார் என்று கே. ஜி பி. தலைவர் தெரிவித்துள்ளார். [கே]

### கொக்கட்டிச்சோலையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது ஹெலிகப்டரிலிருந்து துரத்தித் துரத்திச் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

களிமடுவில் மைலர் சின்னத்தம்பி, அவரது மனைவி தெய்வானை சின்னத்தம்பி ஆகியோர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டனர்.

கண்ணப்பர் சின்னப்பர் என்பவரும் அவரது மனைவியும் அவர்களது வீட்டுக்குள் வைத்து எரித்து கொல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தின்போது இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்ட 13 தமிழர்கள் இதுவரையும் விடுதலை செய்யப்படவில்லை என்றும் தெரியவருகிறது. (ரி)

### இந்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாக சேர்க்கப்பட்ட ஆறுபேரையும்சேர்த்துஅமைச்சரவையின் பலம் 55ல் இருந்து 62ஆக உயர்ந்துள்ளது

மத்திய இணை அமைச்சர் திரு ரங்கராஜன் குமாரமங்கலத்திடமிருந்து சட்டத்துறை எடுக்கப்பட்டு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்துறை வழங்கப்பட்டுள்ளது.

(மா)

### உணவுப் பொருட்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்கென கொழும்பிலிருந்து கப்பலில் எடுத்து வரப்பட்ட பொருள்கள் காங்கேசன்துறை துறைமுக களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்தன.

அரிசி, சீனி, மா உட்பட பல உணவுப் பொருள்கள் இராணுவத்தால் கொள்ளையடிக்கப்பட்டன, (ரி)

### எதிர்க் கட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

140 பேர் வரை படுகாயமடைந்துள்ளார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

நவ சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த 23 பேர் ஜனகோஷ போராட்டத்தில் கைது செய்யப்பட்டதாக நவசமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நவசமசமாஜக்கட்சி செயலாளர் பேராசிரியர் விக்கிரமபாகு கருணரத்னவும் கட்சி உறுப்பினர்கள் பதினெரு பேரும் கண்டி நகரில் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

நேற்று இவர்கள் கண்டி நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சிலாபத்தில் நடைபெற்ற ஜனகோஷ போராட்டத்தின்போது புத்தள மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. எஸ். டி. ஜயரத்ன கைது செய்யப்பட்டு அதன்பின்னர் பொலிசாரால் வாய்முறைப்பாடு பதிந்த பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். [மா]

### இராணுவத்தின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

புலிகள் நேரடி மோதலில் ஈடுபடக்கூடிய நிலையில் இல்லை என அறிக்கைகளை முதலில் இராணுவம் வெளியிடும் பின் புலிகளுடன் படையினர் பல மணிநேரம் நேரடி மோதலில் ஈடுபட்டனர் என கூறிவருகின்றனர்.

இந்த நேரடி மோதலில் தமது தரப்பில் 19படையினர் கொல்லப்பட்டதாக அவர்கள் கூறிய போதிலும் புலிகள் நடாத்திய திடீர் தாக்குதலில் இராணுவத்திற்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டிருப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

### யாழ்.குடாவை

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

ஆனல் அதில் பெருமளவு படையினரை அவர்கள் இழந்ததுடன் அப்போதைய முயற்சியும் தோல்வியடைந்தது. படையினர் வாபஸ் பெறப்பட்டனர்.

இம்முறையும் அவ்வாறுனதொரு முயற்சியை மேற்கொண்டுள்ள போதிலும் இம்முயற்சியிலும் எதுவித பயனும் ஏற்படவில்லை.

அன்று படையினருக்கு என்ன நிலையேற்பட்டதோ அதே நிலைதான் இன்றும் ஏற்பட்டுள்ளது. எனவே தான் இராணுவம் மீண்டும் அதே நடவடிக்கையை எடுத்து வருவது பெரும் புதிராக இருப்பதாகவும் பி. பி. ஸி. தெரிவித்தது. (சி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 03ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the General Post office Srt Lanka under Licence Number B/10336/8